

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்


# மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2024


## விடைத்தாள் புள்ளியிடலுக்கான அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

## பத்திரம் I









முழுப் பதிப்புரிமையுடையது

செம்மையாக்கம் செய்யப்பட்ட பிரதி

## தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024
## பத்திரம் I

### விடைத்தாள் புள்ளியிடுவதற்காக அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

**01. விடைத்தாள் மதிப்பிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

1.1 எல்லா வினாக்களினதும் சரியான விடைகளுக்கு "✓" அடையாளத்தையும் பிழையான விடைகளுக்கு "x" அடையாளத்தையும் உரிய விடைகளுக்கு எதிரே கோட்டுக்கு வெளியே வலப் பக்கமாகத் தெளிவாகக் குறிப்பிடுக.

1.2 ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள சரியான விடைகளின் "✓" அடையாளங்களின் கூட்டுத்தொகையை அப்பக்கத்தில் வலதுபக்க கீழ் மூலையில் உள்ள **கூட்டுக்குள் இரண்டு இலக்கங்களில் எழுதவும்.**

1.3 ஒவ்வொரு பக்கத்திலும் குறிக்கப்பட்ட சரியான ("✓") விடைகளின் எண்ணிக்கையை விடைத்தாளின் முன்பக்கத்தில் "பெற்ற புள்ளிகள்" எனும் இடத்தினுள் ஒவ்வொரு பக்கங்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்களில் சரியாக எழுதுக. அதன் பின்பு சரியான விடைகளின் கூட்டுத்தொகையை இறுதிப் புள்ளிகளுக்குரிய கூடுகளில் இலக்கத்திலும் எழுத்திலும் எழுதுக.

1.4 **ஏதேனும் வினாவொன்றிற்கு விடையளிக்கப்படாதவிடத்து மூன்று விடைகளின் கீழும் சிவப்பு நிறத்தில் கோடிட்டு " × " பிழை அடையாளமிடுக.**

1.5 விடைத்தாள் மதிப்பீட்டில் பரீட்சகர்கள் இருவரும் மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்துபவரும் பரீட்சித்த பின்பு தமது குறியீட்டெண்ணையும் கையொப்பத்தையும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

**02. விபரப் புள்ளித்தாளைத் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை.**

2.1 புள்ளித்தாளில் "Total marks" எனும் நிரலில் புள்ளிகளைப் பதியவும்.

2.2 அந்நிரலில் ஒவ்வொரு பரீட்சார்த்தியினதும் சுட்டெண்ணுக்கு எதிரே அவ்விடைத்தாளுக்குரிய இறுதிப் புள்ளியை இலக்கத்தில் பதியவும்.

2.3 அவ்விறுதிப் புள்ளியை அதற்கு முன்னால் உள்ள "Marks in words" எனும் நிரலில் தெளிவாக எழுத்தில் எழுதவும்.

2.4 விபரப் புள்ளித்தாளைப் பூரணப்படுத்தும் போது எவையேனும் பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தெளிவாகத் **தனிக்கோடொன்றால் வெட்டிவிட்டு,** மீண்டும் சரியாக எழுதி, புள்ளி பதிந்தவரும், பரீட்சித்தவரும் தங்களது சிற்றொப்பங்களை இடவும்.

2.5 புள்ளிகள் திருத்தி எழுதப்பட்ட இடங்களில் விடைத்தாள் பரீட்சகர் 1, 2 ஆகிய இருவரும் சிற்றொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.





2.6 புள்ளிகள் வெட்டி திருத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புள்ளித்தாளும் விடைத்தாளும் பிரதம பரீட்சகரிடம் காட்டப்பட்டு, அவரின் ஒப்பம் திருத்தப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் பெறப்பட வேண்டும்.




2.7 அத்துடன் செய்யப்பட்ட திருத்தம் விபரப் புள்ளித்தாளின் மறுபக்கத்தின் அடியில் உள்ள "குறிப்புகள்" என்ற இடத்தில் எழுதப்பட்டு பரீட்சகர் இருவரதும் முழு ஒப்பம் இடப்பட வேண்டும்.

2.8 ஒவ்வொரு புள்ளித்தாளிலும் புள்ளிகளைப் பதிந்தவர் ஒப்பமிடுவதுடன் அவ்விபரப் புள்ளித்தாளை விடைத்தாள்களுடன் ஒப்பிட்டுப் பரீட்சித்தவரும் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணிதப் பரீட்சகரும் (EMF) பிரதம பரீட்சகரும் அவரவருக்குரிய இடத்தில் ஒப்பமிட்டு, குறியீட்டெண்ணையும் இட வேண்டியது கட்டாயமாகும்.

வினாக்களுக்குரிய சரியான விடையையோ அல்லது அதன் இலக்கத்தையோ விடையின் பகுதியையோ தெரிவு செய்து அதன் கீழ் கோடிட்டு அல்லது வட்டமிட்டு அடையாளமிட்டு சரியாக குறிப்பிடப்பட்டிருப்பின் அதனை சரியான விடையாகக் கொள்க. **விடை எழுத்தில் எழுதப்பட்டிருப்பின் சரியெனக் கொள்ள வேண்டாம்.**

## பத்திரம் I

| வினா இல. | விடை இல. | விடை |
|---|---|---|
| 01. | (1) | உரு A இல் வானம் வரையப்பட்டுள்ள அதே விதத்தில் உரு B இலும் வானம் வரையப்பட்டுள்ளது. |
| 02. | (2) | 5 |
| 03. | (3) | அதிகாலையில் சுறுசுறுப்பாக செல்லும் |
| 04. | (3) | வாசகன் மருந்து பாடசாலை |
| 05. | (All) | ஏதாவது விடைக்கு அடையாளமிடப்பட்டிருப்பினும் அடையாளம் இடாதிருப்பினும் புள்ளி வழங்குக. |
| 06. | (2) | c a e b d |
| 07. | (2) |  |
| 08. | (1) |  |
| 09. | (3) |  |
| 10. | (1) |  |
| 11. | (1) | A, B, C ஆகிய மூன்று உருக்களையும் வரையலாம். |
| 12. | (2) | கவிஷவும் பாத்திமாவும் |
| 13. | (All) | ஏதாவது விடைக்கு அடையாளமிடப்பட்டிருப்பினும் அடையாளம் இடாதிருப்பினும் புள்ளி வழங்குக. |
| 14. | (1) | 5 நிமிடங்கள் |
| 15. | (1) | இலாபம் ஏற்படுகின்றது. |
| 16. | (3) | திரு. சிறிபால தனது மோட்டார்க் காரில் அலுவலகத்திற்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் குடையை எடுத்துக் கொண்டு செல்கின்றார். |
| 17. | (3) | 12 |
| 18. | (2) | 85 |

| வினா இல. | விடை இல. | விடை |
|---|---|---|
| 19. | (3) | சிறியவனாக இருப்பதனால் |
| 20. | (3) | அஞ்சல் அலுவலகத்திலிருந்து கோயிலுக்குச் செல்லும்போது குளக்கட்டின் மீதே செல்ல வேண்டும். |
| 21. | (1) |  |
| 22. | (3) | C உம் D உம் |
| 23. | (1) | 5 நிமிடங்கள் |
| 24. | (3) | தெற்கு |
| 25. | (2) | 11 |
| 26. | (2) | 7 |
| 27. | (All) | ஏதாவது விடைக்கு அடையாளமிடப்பட்டிருப்பினும் அடையாளம் இடாதிருப்பினும் புள்ளி வழங்குக. |
| 28. | (2) | B, C, A |
| 29. | (2) | ◉ △ □ ✡ |
| 30. | (2) | 5 |
| 31. | (3) | 8 ஆம் பிள்ளையும் 12 ஆம் பிள்ளையும் |
| 32. | (1) |  |
| 33. | (2) | 16 m |
| 34. | (3) | சங்கரின் |
| 35. | (3) | 4 |
| 36. | (1) |  |
| 37. | (2) | B D A C |
| 38. | (2) | மும்மடங்கு |
| 39. | (2) | 5 |
| 40. | (1) | M ⟶ B ⟶ A ⟶ N |

அந்தரங்கமானது


விடைத்தாள் புள்ளியிடும் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2024

## விடைத்தாள் புள்ளியிடலுக்கான அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

## பத்திரம் II




முழுப் பதிப்புரிமையுடையது

செம்மையாக்கம் செய்யப்பட்ட பிரதி

# மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

## பத்திரம் II

### விடைத்தாள் புள்ளியிடுவதற்காக பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

**01. விடைத்தாள்களை புள்ளியிடலில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

1.1 சகல வினாக்களினதும் விடைகளுக்கெதிரே சரியாயின் "✓" என அடையாளத்தையும் பிழையாயின் "×" என அடையாளத்தையும் வலது பக்கக் கோட்டிற்கு அண்மையில் குறிப்பிடவும். அதற்குரிய புள்ளிகள் "01 அல்லது 02 அல்லது 00" என்பதைக் கட்டத்தின் வலதுபக்கக் கோட்டின் வெளிப்புறமாகவுள்ள நிரலில் தெளிவாகக் குறிப்பிடவும்.

1.2 ஒவ்வொரு பக்கத்திற்குமுரிய சரியான விடைகளுக்குரிய புள்ளிகளின் மொத்தத் தொகையை அப்பக்கத்தின் வலது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்ட **கூட்டினுள் இரு இலக்கங்களினால் குறிப்பிடவும்.**

1.3 ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்பிட்டுள்ள மொத்தப் புள்ளிகளை முன்பக்கத்திலுள்ள குறித்த பக்க எண்ணுக்கு எதிரே உள்ள கூட்டினுள் தெளிவாக எழுதவும்.

1.4 முழு விடைத்தாளையும் கவனத்தில் கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும் சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் மேலதிகமாக **02** புள்ளிகள் வழங்குக. கையெழுத்து **தெளிவற்றிருப்பினும்** சரியாக எழுதப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக. அப்புள்ளியை +02 அல்லது +01 அல்லது +00 என 8 ஆவது பக்கத்தில் எழுதப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளுக்கு எதிரில் + குறியீடு இட்டு எழுதவும். அவ்வாறே முதல் பக்கத்தில் 08 ஆவது பக்கத்திற்குரிய புள்ளிகளை குறிப்பிட்ட இடத்தில் +02 அல்லது +01 அல்லது +00 என மேலதிக புள்ளிகளை எழுதுக. (+02 அல்லது +01 என புள்ளி **வழங்காது விடின் + 00** எனக் குறிப்பிடுக.)

1.5 இறுதிப்புள்ளிகளை **இலக்கத்திலும் எழுத்திலும்** அதற்குரிய கூட்டினுள் தெளிவாக எழுதவும்.

**02. புள்ளி வழங்குவது தொடர்பான சுருக்க விபரம் :**

2.1 வினா இல 1 இலிருந்து வினா இல 9 வரையுள்ள மற்றும் 10 இலிருந்து 14 வரையுள்ள வினாக்களின் எல்லா பகுதிகளுக்கும் சரியான விடை எழுதியிருப்பின் 01 புள்ளி வீதம் வழங்குக.

2.2 வினா இல. 15 இலிருந்து வினா இல 29 வரையான வினாக்களின் சரியான விடைக்கு 02 புள்ளி வீதம் வழங்குக.

2.3 வினா இல. 30 தொடக்கம் 59 வரை சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் வழங்குக.


2.4 வினா இல. 60 இன் ஒரு வாக்கியத்திற்கு 02 புள்ளிகள் வீதம் வழங்குக.


2.5 வினா இல 1 தொடக்கம் 9 வரையில் (வினா இல 2,9 தவிர) மற்றும் 60 ஆகிய வினாக்களுக்கான விடைகளில் எழுத்துப்பிழை இருத்தல் கூடாது.


2.6 வினா இல 10 இற்கான விடைகளில் எழுத்துப்பிழைகள் இருப்பின் புள்ளி வழங்க வேண்டாம். ஆங்கில பேரெழுத்துகள், சிற்றெழுத்துகள் மாறி மாறி எழுதியிருப்பினும் புள்ளிகள் வழங்குக.

# பத்திரம் II
## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | (i) பாரதி மகாவித்தியாலயத்தில் / பாரதி / பாரதி மகாவித்தியாலயம்/ பாரதி பாடசாலை / பாரதி வித்தியாலயம் | 01 |
| | (ii) தரம் ஐந்து மாணவர்களிடம் / தரம் 05 மாணவர்களிடம் | 01 |
| | (iii) ரொபோ / ரொபோ ஆக்கம் / ரொபோ இயந்திரம் / ஒரு ரொபோ | 01 |
| | (iv) * பெற்றோர்களுக்கும் அயலிலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்<br>* பெற்றோர்களுக்கும் அயற்பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்<br>* பெற்றோர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு | 01 |
| | (v) * தமது ஆக்கம் முதலிடம் பெற்றமையால்<br>* தமது ரொபோ ஆக்கம் முதலிடம் பெற்றமையால் | 01 |
| | (vi) முடிவு | 01 |
| | (vii) * கண்காட்சி ஒழுங்கமைப்பு, பங்குபற்றுதல் வெற்றியடைந்தமை | 01 |
| 2 | (i) குடிக்கின்றது<br>(ii) செல்கின்றனர்<br>(iii) முன்வைத்தார்<br>(iv) சென்றனர்<br>(v) ஆடினாள் | 01<br>01<br>01<br>01<br>01 |
| 3 | (i) மேனகா விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடுகி(ன்)றாள்.<br>(ii) சஞ்சயன் சுற்றாடல் தொடர்பான வினாக்களைக் கேட்கி(ன்)றான். | 01<br>01 |
| 4 | (i) மேற்ப**ர**ப்பில், வ**ள**ர்கின்றன<br>(ii) வா**னி**லை, சொற்பொ**ழி**வில்<br>(இந்த சொற்கள் மாற்றி எழுதியிருந்தாலும் சரி எனக்கொள்க. இரண்டு சொற்களும் சரியாக எழுதியிருந்தால் மட்டும் புள்ளி வழங்குக) | 01<br>01 |
| 5 | (i) நூல்நிலையத்திற்கு வருகை தருமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துக.<br>(ii) * மனிதர்கள் பெருமுயற்சி செய்து கல்லை வெளியே தள்ளினார்கள்.<br>* பெருமுயற்சி செய்து மனிதர்கள் கல்லை வெளியே தள்ளினார்கள். | 01<br>01 |
| 6 | (i) நான் பாடசாலை செல்வதற்கு ஆயத்தமாகி(ன்)றேன்.<br>(ii) நாங்கள் கதைப்புத்தகம் வாசிக்கி(ன்)றோம். | 01<br>01 |
| 7 | "நாங்கள் விவசாயப் பண்ணை ஒன்றை பார்வையிடச் செல்வோம்" என்று ஆசிரியை ஆலோசனை கூறினார்.<br>(ஒற்றை மேற்கோட்குறி ( ' ' ) இடப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக. மேற்கோட்குறியும் முற்றுப்புள்ளியும் சரியாக இடப்பட்டிருப்பின் மட்டும் புள்ளி வழங்குக.) | 01 |
| 8 | (i) நடையும்<br>(ii) பக்கம் | 01<br>01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 9 | நண்பி | 01 |
| 10 | (i) Snail S n a i l<br>(ii) Ladder L a d d e r<br>(பேரெழுத்து சிற்றெழுத்து எழுதியிருந்தாலும் சரி எனக் கொள்க.) | 01<br>01 |
| 11 | (i) I am reading a book.<br>(ii) We go to school everyday.<br>(எழுத்துப் பிழையின்றி எழுதப்பட வேண்டும்.) | 01<br>01 |
| 12 | (i) விமானநிலையம்<br>(ii) போத்தல் | 01<br>01 |
| 13 | முகம் | 01 |
| 14 | ஒபே வயச கீயத / ஒபகே வயச கீயத / ஓயாகே வயச கீயத / நுபகே வயச கீயத | 01 |
| 15 | 20630, 20 630 | 02 |
| 16 | நூறாமிடம், 400 / நானூறு<br>(ஒரு விடை மாத்திரம் சரியாக எழுதியிருப்பின் ஒரு புள்ளி வழங்குக.) | 02 |
| 17 | (i) 5 / ஐந்து<br>(ii) 54 / ஐம்பத்து நான்கு | 01<br>01 |
| 18 | 2, 6, 10, 14 ஏறுவரிசையால் எழுதியிருந்தால். | 02 |
| 19 | 85 | 02 |
| 20 | 2050 | 02 |
| 21 | <br>(ஆறு கட்ட நீளமும் மூன்று கட்ட அகலமும் கொண்ட வேறு கட்டங்கள் வரையப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக.) | 02 |
| 22 | 0.3 | 02 |
| 23 | 2375 / 2375.00 / 2375/= , இரண்டாயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து | 02 |
| 24 | 105 / நூற்று ஐந்து / 105 புத்தகங்கள் / புத்தகங்கள் நூற்றைந்து | 02 |
| 25 | 1998 (எழுத்திலும் எழுதலாம்)<br>(தேங்காய்கள் என எழுதியிருந்தலும் சரி எனக் கொள்க.) | 02 |
| 26 | 13 500 | 02 |
| 27 | பி.ப 3.45 / 15:45<br>பிற்பகல் 3.45 / பிற்பகல் மூன்று நாற்பத்தைந்து | 02 |
| 28 | 1 950 | 02 |
| 29 | 12 / பன்னிரண்டு | 02 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 30 | (2) திரு. ஆனந்த சமரக்கோன் | 01 |
| 31 | (3) நாய், கிளி, பல்லி | 01 |
| 32 | (2) நதருயிராகும் | 01 |
| 33 | (3) சில பிராணிகள் தாவரங்களின் பழங்களை உணவாகக் கொண்டு வித்துகளை வெவ்வேறு இடங்களில் இடுதல் | 01 |
| 34 | (3) மண்புழு, ஆந்தை, வண்ணாத்துப்பூச்சி ஆகும். | 01 |
| 35 | (2) பிராணிகள் தமது வாழிடங்களைத் தயார் செய்தல் | 01 |
| 36 | (2) புல்லி | 01 |
| 37 | (1) கங்குன் | 01 |
| 38 | (3) பூச்சிகளினால் ஏற்படுத்தப்படும் சேதத்தைத் தவிர்ப்பதற்கு இரசாயனப் பொருள்களைப் பிரயோகித்தல் | 01 |
| 39 | (2) அணைக்கட்டின் அடிப்பகுதியின் அகலம் நடுப்பகுதியிலும் மேற்பகுதியிலும் பார்க்கப் பெரியது. | 01 |
| 40 | (3) கப்பி, கயிற்றுத்துண்டு ஆகியவற்றின் மூலம் | 01 |
| 41 | (1) நீர்ப் பிசாசு அமைத்தல், வெளி வேலி கொய்தல், தீக்குவியல் மூட்டுதல் | 01 |
| 42 | (3) மத்திய மாகாணமும் ஊவா மாகாணமும் | 01 |
| 43 | (1) விற்றமின் A | 01 |
| 44 | (3) ஊதா | 01 |
| 45 | (2) மீளப் பயன்படுத்தல் | 01 |
| 46 | (2) சின்னமுத்து | 01 |
| 47 | (2) குண்டூசி | 01 |
| 48 | (1) ரெஜிபோம் பெட்டியில் இடப்பட்டு மூடிவைக்கப்படுதல் | 01 |
| 49 | (3) வேர் | 01 |
| 50 | (1) இணையத்திலிருந்து அறிவை எளிதாகப் பெறத்தக்கதாக இருக்கின்றமை | 01 |
| 51 | (3) தாள் C இல் செம்மஞ்சள் நிறம் காணப்பட்டது. | 01 |
| 52 | (1) A  | 01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 53 | (1)  | 01 |
| 54 | (2) ஒரு குமிழ் மாத்திரம் ஒளிரும். | 01 |
| 55 | (1) வீட்டுத் தோட்டத்தில் நீர் தேங்கியிருக்கும் இடங்களைத் துப்பரவு செய்யாமையால் | 01 |
| 56 | (2) அந்த இடத்தில் இருந்து விரைவாக வெளியேறி வயதில்மூத்த ஒருவருக்கு அறிவித்தல் | 01 |
| 57 | (1) ஆண்களுக்கும் பெண்களுக்குமென ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருத்தல் | 01 |
| 58 | (2) காற்றுச் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்தல் | 01 |
| 59 | (2) பல குழிகள் உள்ள மரப்பலகை மீது ஆகும். | 01 |
| 60 | **03 சரியான வாக்கியங்கள்**<br><br>**வாக்கியங்களை மதிப்பிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**<br>i. சரியான 3 வாக்கியங்களுக்கு **02 புள்ளிகள் வீதம் (02 x 3) 06 புள்ளிகள்** வழங்குக.<br>ii. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து ( 5 ) சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.<br>iii. எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியானதாக இருத்தல் வேண்டும்.<br>iv. எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.<br>v. தலைப்பிற்குப் பொருத்தமானதாக எழுதப்பட்ட வாக்கியங்களாக அமைதல் வேண்டும்.<br>vi. எழுத்து வழக்கில் அமைந்த வாக்கியங்களாக இருத்தல் வேண்டும்.<br>vii. வாக்கியத்தின் கருத்து தெளிவாக வெளிப்படல் வேண்டும்.<br>viii. ஒரே கருத்துடைய வாக்கியத்தை மீண்டும் மீண்டும் எழுதியிருப்பின் **புள்ளி வழங்க வேண்டாம்.**<br>ix. வாக்கியங்கள் இறந்தகாலத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.<br><br>▪ **வாக்கியத்திற்கு ஒரு புள்ளி வழங்குவதற்கான அறிவுறுத்தல்**<br>வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் 01 புள்ளி மட்டும் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகளிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம். | 02 x 3 = 06 |

# மாணவர்கள் எழுதிய வாக்கியங்கள்

1. நான் ஒரு நாள் வானைப் பார்த்த போது முகில்கள் அனைத்தும் ஒரு பறவை போல இருந்தது.
2. நான் பார்த்த வானவெளியில் சூரியன் தங்கத் தகடு போல் காட்சியளித்தது.
3. பறவைகள் அதனுடைய பட்டுச் சிறகுகளை விரித்து நிரை நிரையாக தமது உறைவிடங்களை நோக்கிப் பறந்து செல்வதைக் கண்டேன்.
4. வெளிச்சமாக இருந்த வானம் கொஞ்சம் கொஞ்சமாக இருளாக மறைவதைக் கண்டு வியப்படைந்தேன்.
5. நான் பார்த்த வானத்தில் கதிரவனின் ஒளி வானம் எங்கும் பரவிக் காணப்பட்டது.
6. நான் மாலையில் வானத்தைப்பார்த்த போது சூரிய குடும்பத்தில் ஓர் கோளான வெள்ளியைப் பார்த்து வியந்தேன்.
7. வானம் முழுதும் நிறைந்திருந்த முகில் கூட்டத்தைப் பார்த்து வியப்படைந்தேன்.
8. அவ் வானம் பார்ப்பதற்கு கருநீல நிறமாகக் காட்சியளித்தது.
9. அதனை இரசிப்பதற்கு மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.
10. மழை பெய்து நிறுத்தியதும் வானம் மிகவும் அழகாக இருந்தது.
11. அந்த வானில் பறவைகள் ஓடி ஆடி மகிழ்ச்சியாக விளையாடின.
12. வானில் அழகான மேகம் சூழ்ந்து காணப்பட்டது.
13. நட்சத்திரங்கள் முத்துப் போல் மின்னிக் காணப்பட்டன.
14. அந்த வானில் உள்ள நட்சத்திரங்களை பார்க்கும் போது கறுப்புக் கம்பளத்திற்குள் வெள்ளை முத்து போல காட்சியளித்தது.
15. அந்த வானத்தில் ஒரு குழந்தையின் முகம் போல் சந்திரன் காட்சியளித்தது.
16. நான் வானத்தைப் பார்த்த போது மேகங்கள் ஒன்று கூடி அலை வருவது போல் மிகவும் வியப்பாகக் காட்சியளித்தது.
17. மேகங்கள் எல்லாம் பார்ப்பதற்கு வெள்ளைப் பஞ்சு போல் மிகவும் அழகாகவும் வியப்பாகவும் காட்சியளித்தன.
18. நான் வானத்திலுள்ள சூரியனைப் பார்த்த போது செந்நிறப் பூங்குயில் போல மிகவும் வியப்பாக காட்சியளித்தது.

19. வானம் அழகாக மாறி நிலா வெள்ளி ஓடமொன்று செல்வது போன்று அழகாகக் காட்சியளிக்கின்றது.

20. நான் பார்த்த வியத்தகு வானத்தில் மிக விரைவாக செல்லும் விமானமொன்றைப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

21. அம் மேகக் கூட்டங்கள் நிறைந்த வானத்தில் பறக்கும் பறவைகளின் இனிய கானம் என்னைப் பரவசப்படுத்தியது.

22. மேகங்கள் வெள்ளை நிறப் பஞ்சு போல் காணப்படும்.

23. நிலா பார்ப்பதற்கு வெள்ளை நிற முயல் போல காட்சியளிக்கும்.

24. நிலாவிலிருந்து வரும் ஒளி பள பள என மிக அழகாக இருந்தது.

25. வின்மீன் கள்லொன்று வானத்திற்கு குறுக்கே சென்றது.

26. முகில்களால் நிறைந்த அழகான வானத்தைக் கண்டேன்.

27. பனித்துளிகளை விசிறியது போல நட்சத்திரங்கள் அங்குமிங்கும் காணப்பட்டது.

28. மழையும் வெயிலுமாக வானம் இருண்டு காணப்பட்டது.

29. கடலிலே வண்ண மீனினங்கள் ஓடித்திரிவது போன்று நட்சத்திரங்கள் தென்பட்டன.

30. பெரிய வௌவால்கள், சிறிய ஆந்தைகள் மகிழ்ச்சியாக பறந்து திரிந்து கொண்டிருந்தன.

- ~~~~~~~~ -

**மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**


**பத்திரம் - II**

## புள்ளிவழங்கும் திட்டம் - திருத்தியமைக்கப்பட்டது

**புள்ளி வழங்குவது தொடர்பான சுருக்க விபரம்**

பக்கம் 1. – 2.1 வினா இல 1 இலிருந்து வினா இல 14 வரையுள்ள வினாக்களின் எல்லா பகுதிகளுக்கும் சரியான விடை எழுதியிருப்பின் 01 புள்ளி வீதம் வழங்குக.

2.5 வினா இல 1 தொடக்கம் 09 வரையில் (வினா இல **2,7** தவிர) மற்றும் 60 ஆகிய வினாக்களுக்கான விடைகளில் எழுத்துப் பிழைகள் இருத்தல் கூடாது.

| **வினா இல** | **விடை** |
|---|---|
| 1 | (ii) தரம் ஐந்து மாணவர்களிடம் / தரம் 05 மாணவர்களிடம் / **தரம் ஐந்திடம்** / **தரம் 5 இடம்**<br><br>(iii) ரொபோ / ரொபோ ஆக்கம் / ரொபோ இயந்திரம் / ஒரு ரொபோ / **ரொபோவை**<br><br>(v) * தமது (**தங்களது** / **தங்களின்** / **தங்களுடைய**) ஆக்கம் முதலிடம் பெற்றமையால்<br>* தமது (**தங்களது** / **தங்களின்** / **தங்களுடைய**) ரொபோ ஆக்கம் முதலிடம் பெற்றமையால்<br>* **முதலிடம் பெற்றமையால்** / **முதலிடம் பெற்றுக் கொண்டதால்** |
| 3 | (ii) சஞ்சயன் சுற்றாடல் தொடர்பான **வினாக்களைக்** கேட்கி(ன்)றான். |
| 10 | (i) Snail — s \| n \| a \| i \| l<br>(ii) Ladder — L \| a \| d \| d \| e \| r<br>(பேரெழுத்து சிற்றெழுத்து மற்றும் **கலந்து** எழுதியிருந்தாலும் சரி எனக் கொள்க) |
| 14 | ஒபே வயச கீயத? / ஔபகே வயச கீயத? / ஔயாகே வயச கீயத? / நுபகே வயச கீயத? / **ஔயா(ட்)ட வயச கீயத?**<br>**(வினாக்குறி ( ? ) இடப்படாவிடினும் புள்ளி வழங்குக.)** |
| 16 | நூறாமிடம் / **நூறினிடம்** / 400 / நானூறு |
| 21 | <br>(ஆறு கட்ட நீளமும் மூன்று கட்ட அகலமும் கொண்ட வேறு கட்டங்கள் வரையப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.) **(6 விதமாகக் கட்டங்கள் வரைய முடியும்)** |

| | |
|---|---|
| 24 | 105 / நூற்று ஐந்து / 105 புத்தகங்கள் / புத்தகங்கள் நூற்றைந்து / **நூற்றைந்து புத்தகங்கள்** |
| 25 | 1998 (எழுத்திலும் எழுதலாம்) **ஆயிரத்துத் தொ(ள்)ளாயிரத்து தொண்ணூற்று எட்டு** (தேங்காய்கள் என எழுதியிருந்தலும் சரி எனக் கொள்க.) |
| 27 | பி.ப.3.45 / 15.45 / பிற்பகல் 3.45 / பிற்பகல் மூன்று நாற்பத்தைந்து / **பி.ப 3.45** / **1545** **(பி.ப 3.45 என எழுதும் போது பி ப 3.45 என எழுதியிருப்பின் 01 புள்ளி மாத்திரம் வழங்குக.)** |
| 29 | 12 / பன்னிரண்டு / **12 பைகள்** |



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**


**பத்திரம் - II**

## <u>புள்ளிவழங்கும் திட்டம் - திருத்தியமைக்கப்பட்டது</u>

**புள்ளி வழங்குவது தொடர்பான சுருக்க விபரம்**

பக்கம் 1. – 2.1 வினா இல 1 இலிருந்து வினா இல 14 வரையுள்ள வினாக்களின் எல்லா பகுதிகளுக்கும் சரியான விடை எழுதியிருப்பின் 01 புள்ளி வீதம் வழங்குக.

2.5 வினா இல 1 தொடக்கம் 09 வரையில் (வினா இல **2,7** தவிர) மற்றும் 60 ஆகிய வினாக்களுக்கான விடைகளில் எழுத்துப் பிழைகள் இருத்தல் கூடாது.

| **வினா இல** | **விடை** |
|---|---|
| 1 | (ii) தரம் ஐந்து மாணவர்களிடம் / தரம் 05 மாணவர்களிடம் / **தரம் ஐந்திடம் / தரம் 5 இடம்**<br><br>(iii) ரொபோ / ரொபோ ஆக்கம் / ரொபோ இயந்திரம் / ஒரு ரொபோ / **ரொபோவை**<br><br>(v) * தமது (**தங்களது / தங்களின் / தங்களுடைய**) ஆக்கம் முதலிடம் பெற்றமையால்<br>* தமது (**தங்களது / தங்களின் / தங்களுடைய**) ரொபோ ஆக்கம் முதலிடம் பெற்றமையால்<br>* **முதலிடம் பெற்றமையால் / முதலிடம் பெற்றுக் கொண்டதால்** |
| 3 | (ii) சஞ்சயன் சுற்றாடல் தொடர்பான **வினாக்களைக்** கேட்கி(ன்)றான். |
| 10 | (i) Snail [s][n][a][i][l]<br><br>(ii) Ladder [L][a][d][d][e][r]<br><br>(பேரெழுத்து சிற்றெழுத்து மற்றும் **கலந்து** எழுதியிருந்தாலும் சரி எனக் கொள்க) |
| 14 | ஒபே வயச கீயத? / ஒபகே வயச கீயத? / ஔயாகே வயச கீயத? / நுபகே வயச கீயத? / **ஔயா(ட்)ட வயச கீயத?**<br>**(வினாக்குறி ( ? ) இடப்படாவிடினும் புள்ளி வழங்குக.)** |
| 16 | நூறாமிடம் / **நூறினிடம்** / 400 / நானூறு |
| 21 | <br><br>(ஆறு கட்ட நீளமும் மூன்று கட்ட அகலமும் கொண்ட வேறு கட்டங்கள் வரையப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.) **(6 விதமாகக் கட்டங்கள் வரைய முடியும்)** |

| | |
|---|---|
| 24 | 105 / நூற்று ஐந்து / 105 புத்தகங்கள் / புத்தகங்கள் நூற்றைந்து / **நூற்றைந்து புத்தகங்கள்** |
| 25 | 1998 (எழுத்திலும் எழுதலாம்) **ஆயிரத்துத் தொ(ள்)ளாயிரத்து தொண்ணூற்று எட்டு** (தேங்காய்கள் என எழுதியிருந்தலும் சரி எனக் கொள்க.) |
| 27 | பி.ப.3.45 / 15.45 / பிற்பகல் 3.45 / பிற்பகல் மூன்று நாற்பத்தைந்து / **பி.ப 3.45** / **1545** **(பி.ப 3.45 என எழுதும் போது பி ப 3.45 என எழுதியிருப்பின் 01 புள்ளி மாத்திரம் வழங்குக.)** |
| 29 | 12 / பன்னிரண்டு / **12 பைகள்** |



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න